| | | |
|---|---|---|
| சாட்சி : PW 2<br>லெட்சுமி | அ.வ.எண். 396/2014 | 07.01.2025 |

<u>இ.ம.எண்.5/24, 6/24 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

2) வாதி வனிதா எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவினர் தான், பக்கத்து காட்டுக்காரர் ஆவார். மேற்படி வாதி எனக்கு மகள்வழி உறவு ஆகும். எனக்கு எழுதப்படிக்க தெரியாத காரணத்தினால் தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி வனிதா எப்போது திருமணம் செய்து கொண்டார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வனிதாவும் அவரது கணவரும் மனவருத்தத்தின் காரணமாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் புஞ்சை சாகுபடி செய்து வருகிறார்கள் என்பதை காட்ட என் வசம் ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வாதி புஞ்சை சாகுபடி செய்து வருகிறார் என்பதை பொறுத்து ஆவணங்கள் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ஆதிதிராவிடர்களுக்கு சொந்தமானது என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் என் கைவசம் இல்லை என்றால் சரிதான்.

3) தாவா சொத்து ஆதிதிராவிடர்களுக்கு சொந்தமானது என்பதை பொறுத்து ஆவணங்கள் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். வாதிக்கு பிரதிவாதிகள் எப்போது தொந்தரவு செய்தார்கள் என்று தேதி மாதம் வருடம் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் நியாபகம் இல்லை. வாதி என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரமும் இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன கட்சி செய்கிறார்கள் என்ற விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.தாவா சொத்து தர்மலிங்கத்திற்கு அவரது தந்தை மூலமாக பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் சரிதான்.

4) மேற்படி கந்தனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகள்கள் மற்றும் 1 மகன் ஆவார்கள். மேற்படி 2 மகள்கள் தான் இநத் வழக்கின் 1,2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். தர்மலிங்கத்திற்கு மொத்தம் 3 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பாப்பாத்தி உயிருடம் உள்ளாரா என்றால் இல்லை. மேற்படி முதல் மனைவி மூலமாக மலர் என்று ஒரு மகள் உள்ளார் என்றால் சரிதான். 2ம் மனைவி பெயர் சோலையம்மாள் என்றால் சரிதான். மேறபடி சோலையம்மாளுக்கு சுந்தரி என்ற ஒரு மகள் என்றால் சரிதான், மேற்படி சுந்தரியின் கணவர் பெயர் காந்தி என்றால் சரிதான். தர்மலிங்கத்தின் 3வது மனைவி பெயர் பொன்னரும்பு. மேற்படி பொன்னரும்பிற்கு ரவிச்சந்திரன் என்ற ஒரு மகன் என்றால் சரிதான்.

5) தாவா சொத்தில் கிழக்கில் ஒரு ஏக்கர் மேற்கில் ஒரு ஏக்கர் என்று இரண்டு தாக்குகலாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 தாக்குகளையும் பிரிப்பதற்கு இடையே வாரி உள்ளது. மேற்படி வாரியின் இருபுறமும் கரை உள்ளது என்றால் சரிதான். கிழக்கில் உள்ள ஒரு ஏக்கர் நிலத்தில் ரவிச்சந்திரன் சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். மேற்கில் உள்ள ஒரு ஏக்கர் நிலத்தில் கந்தன் தனது மகள்களுக்கு தலா 50 செண்ட் நிலம் ஒதுக்கி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி அவரவர் பாகத்தை மேற்படி நபர்கள் அனுபவம் செய்து வருகிறாகள் என்றால் சரிதான். மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றாலும், மேற்படி விபரங்களை தெரிந்து கொண்டு வாதி தான் 2 ஏக்கர் நிலத்தை அனுபவம் செய்து வருவதாக வாதி கேட்டுக்கொண்டதற்காக 2 ஏக்கர் நிலத்தை வாதி சாகுபடி செய்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான்.